பக்கங்கள் 6

# ஈழநாடு
The Eelanaadu

60 சதம்

மலர் 23 சித்திரை 11 ஜ. ஆகிர் 17 இதழ் 72
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 23 - 4 - 1981

## மூதூர் தங்கத்துரை 1-ம்இடம் பெற்றுள்ளார்

(பட்டக்களப்பு)

திருமலை மாவட்ட அபிவிருத்திச்சபைத் தேர்தலுக்கான தமிழர் விடுதலைக் கூட்டணியின் வேட்பாளர் பட்டியலில் முன்னுள் மூதூர் எம் பி. திரு. அ தங்கத்துரை முதலாவதாக இடம்பெற்றுள்ளார்.

மூதூரைச் சேர்ந்த ஏ கி. மஹரூப். சேருவிலவைச் சேர்ந்த திரு. இரா. ஞானகணேசன் ஆகியோரே பட்டியலில் இடம்பெற்றுள்ளவர்களாவார்.

இந்த வேட்பாளர்களைத் தெரிவுசெய்வதற்கான கூட்டம் நேற்று திருமலை எம். பி இரா. இரா சம்பந்தனின் இல்லத்தில் நடைபெற்றபோது இந்த பட்டியல் தயாரிக்கப்பட்டது.

## காலரா ஒருவர்பலி

(கொழும்பு)

கொழும்பிலுள்ள தனியார் வைத்தியசாலைஒன்றில் காலரா நோய்க்கு ஒருவர் பலியானதைத் தொடர்ந்து வைத்திய சாலைமூடப்பட்டுள்ளது.

# ராணுவத்தினரின் தாக்குதலால்

# உடும்பராயில் ஒருவர் பலி?

## விசாரணை நடத்துமாறு

### ஜனாதிபதி, ஐ.ஜி.பிக்கு 'யோகேஸ்' தந்தி

(யாழ்ப்பாணம்)

**உரும்பராயைச் சேர்ந்த, ஓய்வுபெற்ற தபால்பகுதி மாவட்ட அத்தியட்சகர் திரு. சி. நவரத்தினம்; இராணுவத்தினரின் தாக்குதலினால் பலியானரா?**

நேற்று முன்தினம் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டபோது- ''இராணுவத்தினர் என் வீடு புகுந்து தாக்கினர்'' என்று டாக்டரிடம் முறைப்பாடு செய்த திரு. நவரத்தினம்; ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட இருபத்துநான்குமணி நேரத்துக்குள் மரணமானர்.

இவரது மரணத்தில் சந்தேகம்கொண்டுள்ள யாழ். எம். பி. திரு. வெ யோகேஸ்வரன், ''திரு. நவரத்தினத்தின் மரணம் சம்பந்தமாக உடனடியாக விசாரணை நடத்துங்கள்'' என்று ஜனாதிபதியையும், பிரதி பாதுகாப்பு அமைச்சரையும் பொலிஸ் மாஅதிபரையும், வடபிராந்திய பிரதிப் பொலிஸ் மா அதிபரையும் தந்தி மூலம் கேட்டுள்ளார்.

சம்பவதினம் அதிகாலை 5-45 மணியளவில் வீட்டிலுள்ள முந்திரிகைத் தோட்டத்தில் குருவிகளை கலைப்பதற்குவேலைக்காரன் பட்டாசு கொளுத்தியதாகவும், அதேசமயம் அயல் வீடுகளில் சோதனை நடத்திக் கொண்டிருந்த இராணுவத்தினர் வேலியால் பாய்ந்துவந்து. நவரத்தினத்தை விசாரணை செய்து பெனியனை கிழித்து தாக்கியதாகவும் பின்னர் அவர் சுகவீனமுற்று யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட சமயம், டாக்டரிடம், இராணுவத்தாக்குதலினால், ஆஸ்பத்திரிக்கு வந்ததாககூறியுள்ளதாகவும் சாட்சியங்கள் மூலம் தெரியவருகிறது.

ஆஸ்பத்திரியில்அனுமதிக்கப்பட்டவர் நேற்று முன்தினம் நண்பகல் மரணமானர். சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. லண்டனிலுள்ள மகன்சனிக்கிழமை வந்துசேர்வாரென எதிர்பார்க்கப்படுவதால், அதன்பின்னரே இறுதி சடங்குகள் நடைபெறும் எனகூறப்படுகிறது.

## பலாலி முகாமில் தொடர்ந்து விசாரணை:

# குட்டிமணியின் தகவலால்

### பணத்தை மீட்பதற்கு முடியவில்லையாம்

(கொழும்பு)

பனாகொட இராணுவ முகாமில் வைக்கப்பட்டிருக்கும் குட்டிமணியும் சகாக்களும் இதுவரை சரியான தகவல்கள் எதையுமே வெளியிடவில்லை என்று தெரிகிறது.

அவர்கள் வெளியிடும் தகவல்களைக்கொண்டு கொள்ளைப் பணத்தை மீட்கமுடியாமலிருப்பதாகவும் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

நீர்வேலியில இடம்பெற்ற 81 லட்சம் கொள்ளையின்போது அன்றிரவே கொள்ளைப் பணத்தை கொள்ளையர்கள் பங்குபோட்டிருக்கலாம் என்றும் பொலிஸ் வட்டாரங்கள் நம்பிக்கை தெரிவித்தன.

இதேவேளை இச்சம்பவங்கள் தொடர்பாக தேடப்பட்டு வரும் பல சந்தேகநபர்கள் யாழ்ப்பாண பட்டணத்திலுள்ள ஒரு வீடொன்றில் தங்கியிருப்பதாகக் கிடைத்த தகவல்களைத் தொடர்ந்தே அங்கு கடந்த செவ்வாய்க் கிழமை இரவு பொலிசார் சோதனையிட்டபோது அங்கு

(6-ம் பக்கம் பார்க்க)

## பிரசாரக் கூட்டங்களுக்கு 10மணிவரையே ஒலிபெருக்கி

(கொழும்பு)

மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தல் பிரசாரக் கூட்டங்களுக்கு இரவு பத்துமணி வரை மட்டுமே ஒலிபெருக்கி பாவிக்க அனுமதியளிக்கப்படும்

இம் மாதம் 27ம் திகதிமுதல் ஜூன் மாதம் முதலாம் திகதி வரை எந்த வைபவத்திற்குமே இரவு பத்துமணி வரையே ஒலிபெருக்கி பாவிக்க அனுமதியளிக்கப்படும்.

இதற்கான உத்தரவுகளை சகல பொலிஸ்நிலையங்களுக்கும் பிரதி பொலிஸ் மாஅதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கம் அனுப்பிவைத்துள்ளார்.

(ம-ந)

## மாவட்ட அபிவிருத்திச் சபைத்தேர்தல்

# மட்டக்களப்பில் மூன்று கட்சிகள் 'மோதுகின்றன'

(மட்டக்களப்பு நிருபர் தமிழினியன்)

தமிழ் மாவட்டங்களில் இரண்டாவது பெரியமாவட்டமான மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திச்சபைத் தேர்தலில் மும்முனைப்போட்டி ஏற்பட்டுள்ளது.

வேட்பாளர்பட்டியலை மூன்று கட்சிகளுமே தயாரித்து விட்டன. கூட்டணியின் பட்டியலில் முன்னள் கல்குடாத் தொகுதி வேட்பாளர் திரு. சி சம்பந்தமூர்த்தியும் ஐக்கிய தேசியக்கட்சியின் பட்டியலில் ஆசிரியர் திரு.கே.மாணிக்கமும் சுதந்திரக்கட்சியின் பட்டியலில் முன்னள் எம். பி. திரு. ராஜன் செல்வநாயகமும் முதலாவதாக இடம் பெற்றுள்ளனர்.

கூட்டணியின் வேட்பாளர்களை தெரிவு செய்வதற்கான கூட்டம் மட்டக்களப்பிலுள்ள பட்டிருப்பு எம். பி.

(6-ம் பக்கம் பார்க்க)

## டுபாய் வெடிகுண்டு விபத்தில் இலங்கையர் இருவர் பலி!

டுபாய், ஏப்.22

டுபாயில் உள்ள ஹோட்டல் ஒன்றில் ஏற்பட்ட குண்டுவெடிப்புச் சம்பவத்தில் இலங்கையைச் சேர்ந்த திருமதி தாரா சந்திரமும், திரு. நூர்முகமத் நஜி முதீனும் பலியானதாக அறிவிக்கப்பட்டது. 'ஹியட்றிகன்ஸி' ஹோட்டல் 9 வது மாடியிலேயே இவ்விபத்து ஏற்பட்டது என்றும் ஊழியர்கள் பெரிய பெட்டி ஒன்றை ஒரு மாடியிலிருந்து மற்றொரு மாடிக்கு எடுத்துச் சென்றபோது அப்பெட்டியில் இருந்த குண்டு வெடித்ததாகவும் அறிவிக்கப்பட்டது.

இவ்விபத்தில் மற்றும் ஒரு இலங்கையரான திரு. மணிலால் பத்மசிறி விஜயசேகரா காயமடைந்ததாகவும் அறிவிக்கப்பட்டது. (இ-வெ)




### மங்கல நாண்பூணல் அழைப்பு

மணமகன் — பெரியதம்பி, பொறியியலாளர் (U K)

மணமகள் — வசந்தி

காலம்: 24-04-81 வெள்ளிக்கிழமை

காலை 9-36மணிமுதல் 10-34

வரையான சுபமுகூர்த்தம்

வரவேற்பு: மணமகன் இல்லத்தில் வெள்ளிக்கிழமை 24-4-81 மாலை 5-00 மணி தொடக்கம் 7-00 மணி வரையும்
மணமகள் இல்லத்தில் சனிக்கிழமை 25-4-81 மாலை 5-00 மணி தொடக்கம் 7-00 மணி வரையும் நடைபெறும்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்

க. கனகலிங்கமும் (இளைப்பாறிய பதில் கலால் அத்தியட்சகர்) பாரியாரும், பழைய வீதி, கோப்பாய்.

ச. இராசரத்தினமும் பாரியாரும், இராஜன் மில்ஸ் புன்னலைக்கட்டுவன்.

8933

# வரி விளம்பரம்

## பயிற்சி

றேடியோ-டெலிவிசன் ஏயர் கொண்டிசனிங், வெல்டிங் மூன்று மாத டிப்பிளோமா பயிற்சிகள் ஆரம்பம் 25-4-81 அனைவரும் சேரலாம். நாஷனல் அக்கடமி, 11, மொம்சாக் கட்டிடம், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 8930

## தேவை

கட்டிடங்கள் கட்டுவதில் நல்ல அனுபவமுள்ள மேற்பார்வையாளர் தேவை தகுதியானவருக்கு நல்ல எதிர்காலமுண்டு நேரில் மனுச்செய்க. அரஸ்கோ இன்டஸ்றீஸ், 163, கண்டிவீதி, யாழ்ப்பாணம். 8946

## காணவில்லை

கிளிநொச்சியைப் பிறப்பிடமாகக் கொண்ட கருப்பையா புஸ்பராணி வயது 11. நிறம் கருப்பு கட்டையான தோற்றம். ஒற்றைப்பின்னல். 19-4-81 ஞாயிற்றுக்கிழமை பகல் 11 மணியளவில் இருந்து காணவில்லை. இவரைக் கண்டவர்கள் அல்லது தகவல் தெரிந்தவர்கள் ஆனைக்கோட்டை, பொலிசுக்கு அல்லது எமது விலாசத்திற்கு தயவுசெய்து அறிவிக்கவும். சுப்ரமணியம் இராஜேந்திரா, எச்சாரிடி வைரவர் கோவிலடி, சுதுமலை. 8945

## உடுப்பிட்டி ப. நோ. கூட்டுறவுச் சங்கம்

## விளம்பரம்

உடுப்பிட்டி ப. நோ. கூ. சங்கத்தின் ரகம் பிரிக்கப்பட்ட 1000 வெற்றுச் சாக்குகள் கேள்விப்பத்திர மூலம் விற்பனைக்கு இருக்கிறது 25-4-81 திகதிக்கு முன்னர் ரூபா 100/- மேற்படி சங்கத்தில் கட்டி கேள்விப் பத்திரம் பெற்றுக்கொள்ளவும். கேள்விப்பத்திரங்கள் யாவும் 28-4-81 பகல் 1 மணிக்கு முன்பு கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபால் மூலம் 'பொதுமுகாமையாளர், உடுப்பிட்டி ப நோ. கூ. சங்கம், வல்வெட்டித்துறை' என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

பொதுமுகாமையாளர்,
உடுப்பிட்டி, ப நோ. கூ. சங்கம்
வல்வெட்டித்துறை.

8947

## கரைச்சி வடக்கு ப. நோ. கூ. சங்கம் பரந்தன் போசனசாலை நடாத்துவதற்கான கேள்வி விண்ணப்பம்

எமது சங்கத்தினால் பரந்தன் சந்திக்கருகாமையில் நடாத்தப்பட்டுவரும் போசனசாலையினை நடாத்துவதற்கு கேள்வி விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரர்கள் போசனசாலையினை நேரில் பார்வையிட்டு அதற்கென உள்ள விண்ணப்பப் படிவத்தினையும், நிபந்தனைகளையும் ரூபா 110/- செலுத்தி (ரூபா. 100/- திருப்பிக் கொடுக்கப்படும்) பெற்று விண்ணப்பிக்கவும். விண்ணப்பங்கள் யாவும் உரியபடிவத்தில் நிரப்பப்பட்டு, இடதுபக்க மேல் மூலையில் "போசனசாலை நடாத்துவதற்கான கேள்வி விண்ணப்பம்" என எழுதி, தலைவர், கரைச்சி வடக்கு ப நோ. கூ. சங்கம், பரந்தன் என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் 6-5-81க்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்புதல் வேண்டும்.

தலைவர்
கரைச்சி வடக்கு
ப. நோ. கூ. சங்கம்,
பரந்தன்.

8942

# வர்த்தக நிலையங்களில் விலைப்பட்டியல் அவசியம்

(யாழ்ப்பாணம்)

வர்த்தக நிலையங்களில், நிறுத்தல், நீட்டல் கன அளவுகள் விலைகளைக்கொண்ட பட்டியல் தொங்கவிடப்பட வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

நிறுத்தல் அளவையில் 100, 200, 500 கிறாம், 1 கிலோகிறாம் களுக்கும். நீட்டல் அளவை மீற்றர் விலைகளும், கன அளவில், எரிபொருள் தவிர்ந்தவை 100 மில்லி லீட்டர், 1 லீற்றர் அளவான விலைகளும் வெளியிடப் படவேண்டுமென்று கூறப்பட்டுள்ளது.

இதன்படி பட்டியல் தொங்கவிடப்படாத வர்த்தகர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென விலைக்கட்டுப்பாட்டு அதிகாரி தெரிவித்துள்ளார். (க)

## பொதுச்சபைக் கூட்டம் அல்லவாம்

22-4-81 திகதிய 'ஈழநாடு' முதல்பக்கத்தலைப்புச் செய்தி சம்பந்தமாக கிளிநொச்சி உருத்திரபுரத்திலிருந்து திரு. ஐ. இரத்தினம் பின்வருமாறு எழுதுகிறார்.

21-04-81ல் கிளிநொச்சித் தொகுதி பா. உ. வின் அலுவலகத்தில் நடைபெற்ற கூட்டம் பொதுச்சபைக் கூட்டமல்ல உண்மையில் திரு வீ. ஆனசங்கரி பா. உ. வில் கூட்டப்பட்ட அவரின் ஆதரவாளர்களின் ஆலோசனைக் கூட்டமே அது.

பா. உ. வின் விசேட அழைப்பின் பெயரில் நானும் அக்கூட்டத்தில் கலந்து கொண்டேன். அக்கூட்டத்தில் தொகுதிக் கிளையின் செயலாளர், பொருளாளர், உதவிச் செயலாளர் முதலியோர் கலந்து கொள்ளவில்லை. அது மட்டுமன்றி கூட்டத்தில் கலந்து கொண்ட அரைவாசிக்கும் அதிகமானோர் கிளிநொச்சித்தொகுதியின் பொதுச்சபை உறுப்பினர்களல்லர்.

எனது வேட்புமனுவை திரு இ. கிருஷ்ணராசாவுக்கு ஆதரவாக விட்டுக்கொடுக்குமாறு பலர் கேட்டுக்கொண்டனர். இது சம்பந்தமாக நான் யாருக்காகவும் எனது வேட்பு மனுவை வாபஸ் பெறப்போவதில்லையெனவும் தமிழர் விடுதலைக்கூட்டணியின் நியமனக் குழுவின் முடிவுக்குக் கட்டுப்பட்டுச் செயற்படுவேன் எனவும் உறுதியளித்தேன்.

## கோபுரநிதிக்கு தாலிக்கொடி அன்பளிப்பு!

(பண்டத்தரிப்பு)

வடலியடைப்பு புருதலை ஸ்ரீசித்திவிநாயகர் ஆலயத்தில்மூன்று லட்சரூபா செலவில் நிறுவப்படவுள்ள இராஜகோபுரத்தின் நிதிக்கு வடலியடைப்பைச் சேர்ந்த பெண் மணி ஒருவர் தமது ஏழரை தங்கப்பவுண் நிறையுள்ள தாலிக்கொடியை அன்பளிப்பாக வழங்கியுள்ளார். ஆலய இராஜகோபுர திருப்பணிச் சபையினரிடம் இந்த தாலிக்கொடி கையளிக்கப்பட்டுள்ளது. (இ)

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

யாழ். நகரில்

கொழும்பு விலைக்கே விற்பனை!

சகலவிதமான பத்திரிகை வகைகள்,
அச்சு மைகள், உபகரணங்கள், பாடசாலை
மாணவர்களின் அப்பியாச கொப்பிவகைகள்,
இறக்குமதிசெய்யப்பட்ட றேடியோ,
மின்சார உபகரணங்கள்
அனைத்தும் மொத்தமாகவும் சில்லறையாகவும்பெற

அம்பலவாணர் அன் சன்ஸ்

196, கே. கே எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி; 8291 தந்தி: "வாணர்சன்ஸ்"

## தேவை

தமிழ், ஆங்கில அச்சுக்கோப்பாளர்கள்

தமிழ், ஆங்கில அச்சுக்கோப்பாளர்கள் தேவை. திறமைக்கும் அனுபவத்திற்கும் ஏற்ப வேதனம் வழங்கப்படும். சிங்களமொழி அறிவு மேலதிகத் தகைமையாகக் கருதப்படும். விண்ணப்பிக்கவும் அல்லது நேரில் வரவும்.

சி. சிவகுருநாதன்,
411/1, காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம்.

8948

க. செ. த. செ. செல்லையா பிள்ளை
அடைவுகடை

## அறிவித்தல்

அடைவுகடைகளுக்கான வரிவீதத்தை அரசாங்கம் அதிகரித்திருப்பதன் காரணமாக நாம், எமது அடைவு கடையை மூடதீர்மானித்திருக்கிறோம்.

தயவுசெய்து எமது இத்தாபனத்தில் அடைவு வைத்தவர்கள், தமது பொருட்களை எதிர்வரும் ஜூலை மாதம் 31-ம் திகதிக்கு முன்பாக மீட்டுக்கொள்ளும்படி இவ்வறிவித்தல் மூலம் கேட்டுக் கொள்கிறோம்.

காலை 9 மணியிலிருந்து பகல் 1 மணி வரை எமது ஸ்தாபனம் திறந்திருக்கும்.

இப்படிக்கு,
C.S.T.C. க. செ. த. செ.
195, கே. கே. எஸ். வீதி, அடைவு பிடிப்பவர்.
யாழ்ப்பாணம், 22-4-81 8941

யாழ். நகரில்

# 286 பேர் குழாய் நீருக்கு விண்ணப்பம்

(யாழ்ப்பாணம்)

"யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு 75ம் ஆண்டு முதல் 286 பேர் குழாய்நீருக்காக விண்ணப்பித்துள்ளார்கள். போதிய நீர் இல்லாததினால் இவர்களுக்கு இன்னும் நீர் வழங்கப்படவில்லை"

யாழ் முதல்வர் திரு இராஜா விஸ்வநாதன் பத்திரிகையாளர் மாநாட்டில் மேற்கண்டவாறு கூறினார்.

திரு இராஜா விஸ்வநாதன் மேலும் கூறியதாவது:

"மாநகரசபைக்கு ஒரு லட்சம் கலன் தண்ணீர் கிடைக்கும் என்று தெரிவிக்கப்பட்டது. அந்நீர் இன்னும் கிடைக்கவில்லை இதனால் வரியிறுப்பாளரின் தண்ணீர் தேவையை பூர்த்திசெய்யமுடியாமலிருக்கிறது.

உள்ளூராட்சி அமைச்சின் பணிப்பலர் பேரில் தனியார் ஹொட்டல் ஒன்றுக்கு தினமும் 500 கலன் நீர் வழங்கப்படுகிறது. மேலிடத்தின் அனுமதியுடன் சபை உறுப்பினர் ஒருவருக்கும் நிதித்துறை உயர் பதவியிலுள்ளவரின் பங்களாவிற்கும் குழாய்நீர் வழங்கப்பட்டுவருகிறது.

'யாழ் நகரில் உள்ள தனியார் ஹொட்டல் தினமும் 1500 கலன் நீர் தேவையெனக் கேட்டது இதனைவழங்க சபை மறுத்துவிட்டது பிரதமரி திரு ஆர். பிரேமதாசா யாழ்ப்பாணம் வந்தசமயம் தற்காலிகமாக இந்த ஹொட்டலுக்கு மேலிடத்தின் பணிப்பின பேரில், நீர்வழங்கப்பட்டது. பிரதமர் யாழ்ப்பாணத்தை விட்டு சென்றபின் தற்காலிகமாக இந்தக்ஹொட்டலுக்கு வழங்கப்பட்ட நீர் நிறுத்தப்பட்டது. இதன் பின்னர் யாழ். நகர் உல்லாசப்பிரயாணிகளுக்கு பாதிப்பு ஏற்படுமென்று மேலிடம் பணித்துள்ளதால் தற்போது 500 கலன் மட்டும் இந்த ஹொட்டலுக்கு வழங்கப்பட்டுவருகிறது. (வ)

# அடையாள அட்டைஅவசியம் வைத்திருக்க வேண்டும்

## விரைவில் சட்டம் வருகிறது

(கொழும்பு)

18 வயதுக்கு மேற்பட்ட சகலரும் தமது அடையாள அட்டைகளைத் தம்முடன் எடுத்துச் செல்ல வேண்டியது அவசியமாக்கப்படவுள்ளது.

ஒவ்வொரு பிரஜையும் அடையாள அட்டையைக் கொண்டு செல்வதை கட்டாயப்படுத்துவதற்கும், அங்கீகாரம் பெற்ற ஒருவர் அடையாள அட்டையை பரிசீலிக்கும் அனுமதியை வழங்குவதற்கும் 1968 ஆம் ஆண்டின் ஆட்களை பதிவு செய்யும்சட்ட விதிகளில் திருத்தம் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் தெரியவருகிறது. அடையாள அட்டையை மக்கள் தம்முடன் எடுத்துச் செல்வதில் அநேக நன்மைகள் இருப்பதாகவும் பொலிஸ்வட்டாரங்கள் தெரிவித்தன பொதுமக்கள் தாம் செல்லுமிடமெல்லாம் கட்டாயம் தேசிய அடையாள அட்டைகளை எடுத்துச் செல்ல வேண்டுமென்ற விதி அநேக ஆசிய நாடுகளில் அமுல் நடத்தப்படுகிறது. சிங்கப்பூரில் அடையாள அட்டையைக் கொண்டு செல்லத் தவறுபவர்களுக்கு அபராதம் விதிக்கப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கதாகும். (து)

# சட்டவிரோத கொட்டில்களை அகற்ற நடவடிக்கை

## யாழ். முதல்வர் தகவல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குள் அரச காணிகளில் அனுமதியின்றி கொட்டில்கள் கட்டுவோர் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று யாழ் முதல்வர் திரு இரா விஸ்வநாதன் தெரிவித்தார்.

இது பற்றி ஆணையாளர் அரசாங்க அதிபரின் கவனத்திற்குக் கொண்டு வந்திருப்பதாகவும் அவர்கூறினார்.

சுகாதாரத்திற்கு பங்கமாக கொட்டில்கள் அமைப்போர் மீது மாநகரசபை நடவடிக்கை எடுக்கும் என்று அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது ஏற்கனவே அனுமதியின்றிப் போடப்பட்ட கொட்டில்களை அகற்ற நடவடிக்கை எடுத்துள்ளோம். செல்வரக்குள்ளவர்களும் சொந்தமாக வீடு உள்ளவர்களும் அரசாங்க காணிகளில் இரவோடு இரவாக கொட்டில்களை அமைத்து வீடுஇல்லாதவர்களிடம் குறிப்பிட்ட ஒருதொகை பணத்தையுப் பெற்றுக்கொள்வதாகவும் தகவல் கிடைத்திருக்கிறது. இது பற்றி விசாரணை செய்து நடவடிக்கை எடுப்போம். (கு)

## சனசமுகநிலைய ஆண்டு விழா

(யாழ்ப்பாணம்)

பாஷையூர் மக்கள்முன்னேற்றச்சங்க சனசமூக நிலையத்தின் ஆண்டுவிழா இம்மாதம் 28 ம், 29ம் திகதகளில் நடைபெற உள்ளது. இவ்வாண்டு விழாவில் பல சிறப்பு நிகழ்ச்சிகள் இடம்பெறும்.

## பாலஸ்தாபனம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை விநாயகர் முதலியார் வீதியில் எழுந்தருளியிருக்கும் சித்திவிநாயகர் சின்னப்பிள்ளையார் கோவிலில் நாளைக் காலை பாலஸ்தாபனம் நடைபெறும். பாலஸ்தாபனக்கிரியைகளை பிரம்மஸ்ரீ எஸ். சிவசாமிக்குருக்கள் நடத்துவார்.

## பொங்கல் விழா

(மாங்குளம்)

மாங்குளம் — துணுக்காய் வீதியில் அமைந்துள்ள வன்னிவிழாங்குளம் முத்துமாரி அம்மன் கோவில் வருடாந்த பொங்கல்விழா அடுத்தமாதம் 15-ம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறும். அன்றையதினம் அன்னதானம் வழங்குவதற்கும் போக்குவரத்து வசதிகளை ஏற்பாடு செய்வதற்கும் அன்னதான சபையினர் ஈடுபட்டு வருகின்றார்கள்.

## மண்டலாபிஷேக பூர்த்தி விழா

(பளை)

நாகுட்டான் செல்வ முத்துமாரியம்மன் மண்டலாபிஷேக பூர்த்திவிழா அடுத்த மாதம் 3 ம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் அத்தினத்தில் 1008 சங்காபிஷேகம், பெருமளவிலான திரவிய அபிஷேகம் ஆகியன இடம் பெறுவதுடன் இரவு திருவிழாவும் நடைபெறும்.

### மணிவாக்கு

பேசுபவர்க்கெல்லாம் நீ காது கொடு. ஆனால் எல்லார்க்கும் நீ வாய் கொடுக்க வேண்டாம்.

— அருள்விருந்து.

# நமது நோக்கு

## சன்சோனி சிபாரிசுகள்

எதிர்பாராத வகையில் ஜனாதிபதி ஜயவர்த்தனவின் புதிய ஆட்சிக்கு அபசகுனமாக நிகழ்ந்தது 1977 ஆகஸ்டில் நடந்த இனக்கலவரம்.

இப்பயங்கரசம்பவத்தால் எழுந்த கொந்தளிப்பை ஓரளவுக்குத் தணிக்க உதவியது அரசாங்கம் நியமித்த சன்சோனிக் கமிஷனென்றால் அது மிகையாகாது. சுமார் இரண்டு வருடங்களாக நடைபெற்ற விசாரணையில் பாதிக்கப்பட்ட மக்கள் காட்டிய ஆர்வம் நடந்தேறிய கொடுமைகளுக்கு ஒருவித தேற்றமளிப்பது போல் தோன்றிற்று.

கமிஷன் என்றால் சங்கடமான நிலைகளைச் சமாளிக்கும் உபாயமென்ற கருத்தும் நிலவியது. கமிஷன், கமிட்டி, கருத்தரங்கு இவையெல்லாம் தலையிடி தரும் தீர்மானங்கள். எடுக்கமுடியாத நிலையில் கையாளப்படும் சூழ்ச்சிகளென்பது மறுப்பதற்கில்லை ஆனால் ஜனாதிபதி ஜெயவர்த்தனவின நேரடி நடவடிக்கைகள் இவற்றிற்குப் புறம்பானவையெனக் கொள்ளலாம்.

விசேட ஜனாதிபதி ஆணைக்குழு கடந்த ஆட்சியில் நிகழ்ந்த அரசியல் குற்றங்களை துரிதமாய் விசாரித்ததும், அவற்றிற்குரிய தண்டனை விதித்ததும் இதற்கு ஒரு சிறந்த உதாரணமாகும்.

பொதுமக்கள், அரசாங்க ஊழியர்கள், தொழிலாளர்கள் பெருமளவில் தாக்கப்பட்டதும் உயிர் உடைமை இழந்ததும், இன்னும் பல்வேறு தாங்கொணுத்துன்பங்களுக்குள்ளானதும், ஜனாதிபதியின் நேரடிக் கவனத்தை ஈர்த்தன. இதன் விளைவாக நியமிக்கப்பட்ட சன்சோனிக்கமிஷன் எப்போது தனது அறிக்கையைச் சமர்ப்பிக்கும் என்ற ஆவலை பொதுமக்கள் கொண்டிருந்தனர்.

சுமார் ஐந்து மாதங்களுக்கு முன் இங்கும் அங்கும் வெளிவந்த அறிக்கையின் சிபாரிசுகள் சில பொதுமக்களுக்கு நூர்ந்து போன நம்பிக்கையைத் தூண்ட உதவின,

இருந்தும் இதுவரைகாலமும் இவ்விடயம்பற்றி பேச்சுமூச்சு ஒன்றுமில்லாதிருப்பது பெரிய ஏமாற்றமாகும்

எதிர்பாராத நெருக்கடிகள் ஏற்படும் பட்சத்தில் சர்ச்சைக்குரிய சில விடயங்கள் பின்போடப்படுவது இயற்கை.

அறிக்கையை அச்சிடுவதா இல்லையா, பாராளுமன்றத்தில் விவாதிப்பதா இல்லையாவென்ற விடயங்கள்தானும் தாமதமாகலாம்.

ஆனால் கண்டிப்பான, தெளிவான கமிஷன் சிபாரிசுகள் துரிதமாக நிறைவேற்றப்படவேண்டிய அவசியத்தை அரசாங்கம் அலட்சியம் செய்வது நியாயமாகாது.

இந்த அடிப்படையில் இந்தப் பொறுப்புக்குரியவரான எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் இந்தவிடயத்தை ஜனாதிபதியின் அவசிய கவனத்துக்குக் கொண்டுவந்தது மிகப் பொருத்தமாகும்.

சேதத்துக்குள்ளானவர்களின் பிரச்சினை ஒரு கட்சிப் பிரச்சினையல்ல; ஒரு தேசியப் பிரச்சினை; மனிதாபிமானத்தின் பெயரில் தாமதமின்றி தீர்த்துவைக்க வேண்டிய பிரச்சினை. தமிழர்கள் சிறுபான்மையினர் பிரச்சனைதானே என்று தட்டிக்கழிப்பதானல் காலத்துக்குக்காலம் இவ்வித சம்பவம் தலையெடுக்கலாம்.

ஏனைய கட்சிகள் இது விடயம் குறித்து மௌனம் சாதிப்பது மர்மமாகும்.

## ஜேம்சன் ஐயர்

மானிப்பாய் ஜேம்சன் ஐயரைக் கேள்விப்படாத முதியவர்கள் எவரும் இம் மாவட்டத்தில் இருக்க மாட்டார்கள்.

ஐயர் அவர்களின் மாளுடைய மூன்று பேர்த்திகளும் அண்மையில் ஐயர் வளர்த்து வைத்த மானிப்பாய் கிறீன் ஆஸ்பத்திரியைப் பார்வையிட்ட செய்தி மிக உருக்கமானது.

1938ம் ஆண்டு யாழ் நகர மண்டபத்தில் நிகழ்ந்த பிரிவு விழாவில் குழுமியிருந்த பிரமாண்டமான மக்கள் கூட்டம் கண்ணீர் விட்டு அஞ்சலி செய்ததை மறக்கமுடியாத காட்சி.

இது இன்னொரு சோகக் காட்சியை பலருக்கு நினைவு படுத்தும். மருத்துவத்துக்கு மானிப்பாய் ஐயர் ஜேம்சன் என்றால் கல்விக்கு வட்டுக் கோட்டை ஐயர் பிக்னல் என்பது உடனெழும் எண்ணம். யாழ்ப்பாணக்கல்லூரி விளையாட்டு மண்டபம் இதற்கொரு சாட்சி.

மானிப்பாய் ஐயர் நேரில் மக்கள் அஞ்சலி பெற்று அமெரிக்கா சென்றார். வட்டுக்கோட்டை ஐயர் தமது ஆவியை இங்கே நீத்தார்.

அன்னாரின் ஈமக்கிரியையில் நாள் முழுவதும் ஈடுபட்டிருந்த மானிப்பாய் ஐயர் அன்று சோடிழந்த அன்றிலைப்போல காட்சியளித்தார்.

இவ்விருவரும் அமெரிக்க மிஷன் யாழ்ப்பாணத்துக்களித்த அரும்பெரும் கொடைகள். இங்கு கல்வியும் மருத்துவமும் வளர கடந்தோடிய கதையை இன்று கட்டிடங்களாவது சொல்லும்.

## கூட்டுறவுச்சபை புதிய நிர்வாகிகள்

(மன்னார்)

சிறிலங்கா தேசிய கூட்டுறவுச் சபையின் மன்னார் கிளையின் வருடாந்தக்கூட்டம் மன்னார் கூட்டுறவுச் செயலகத்தில் நடைபெற்றது இக் கூட்டத்தில் புதிய தலைவராக எம். மரியாம்பிள்ளையும் ஏ.எம். அப்துல் காதரும் தெரிவு செய்யப்பட்டனர். இயக்குனர் சபை உறுப்பினர்களாக ஜி.கிருஷ்ணமூர்த்தி, ஏ.எ வியாஸ் பின்னே கே.எம்.எம் முஸ்தபா' என் பாக்கியநாதன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

# ரூ. 75 ஆயிரம் செலவில்

## 'கந்தபுராணவசனம்' மறுபதிப்பு

### நாவலர்சபை வெளியிடுகிறது

(கொழும்பு)

நாவலர் பெருமான் எழுதி வெளியிட்ட "கந்தபுராண வசனம்' என்னும் நூலை, 75 ஆயிரம் ரூபா செலவில மறுபதிப்புச் செய்யும் முயற்சியை ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபை மேற்கொண்டிருக்கின்றது நாவலர் நினைவாக கடந்த காலங்களில் சிலை, மணிமண்டபம், மாநாடுகள், விழாக்கள், மலர் வெளியீடுகள் முதலிய பணிகளைச் சிறந்த முறையில் செய்துள்ள இச்சபையினர் இப்போது கிடைப்பதற்கு அரிதாகவுள்ள நாவலர் நூல்களைத் தொடர்ந்து வெளியிடவும் திட்டமிட்டுள்ளனர். இத்திட்டத்தின் படி முதலாவதாக கந்தபுராணவசனத்தை மறுபதிப்புச் செய்யும் வேலைகள் சபையினால் துரிதமாகச் செய்யப்பட்டுவருகின்றன.

நாவலர் சபையின் ஆட்சிக் குழு முன்னைநாள் நீதியரசர் திரு. வீ. சிவசுப்பிரமணியத்தின் இல்லத்தில் கூடியபோது இந்நூலின் மறுபதிப்பு வேலைகளின் முன்னேற்றம் பற்றி ஆராயப்பட்டது. நூலின் 400 பக்கங்கள் அச்சிடப்பட்டு விட்டதாகவும் மிகுதி 200 பக்கங்கள் மட்டுமே அச்சிட இருப்பதாகவும் இக்கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டது எஞ்சியுள்ள வேலைகளை முடித்து விரைவில் நூலை வெளியிடுவதற்குச் சபைக்கு அவசரமாக நிதி தேவைப்படுவதால் சைவ ஸ்தாபனங்களிடமும் பெரியார்களிடமும் இம்முயற்சிக்கு உதவிகோருவதெனவும் உடனடியாக முற்பணம் அனுப்பிப் பிரதிகளைப்பதிவுசெய்துகொள்ளும் பாடசாலைகள், தனிப்பட்டவர்களுக்குப் பிரதி ஒன்றை ஐம்பது ரூபாவுக்கு வழங்குவதென்றும் முடிவுசெய்யப்பட்டுள்ளது

இம்முயற்சிக்கென இந்து சமய விவகார அமைச்சு அண்மையில் 15 ஆயிரம் ரூபாவை நாவலர் சபைக்கு வழங்கி ஊக்குவித்திருப்பதுகுறிப்பிடத்தக்கது. (அ)

## அரியாலை யூதா ததேயு உற்சவாரம்பம்இன்று

அரியாலை புனித யூதா ததேயு திருவிழாவும் 10 வது ஆண்டு ஆலய நிறைவு விழாவும்.

இன்று வியாழன் முதல் எதிர் வரும் 26ம் திகதி வரை கொண்டாடப்படுகிறது.



இன்று வியாழக்கிழமை மாலை 5-30 மணிக்கு ஆயத்தத் திருவிழா ஆராதனைகளுடன் ஆரம்பமாகி தினசரி மாலை ஆராதனைகளும் சமயப்பிரசங்கங்களும் நடைபெற்று 25ம் திகதி மாலை 5-30மணிக்கு திருப்பலிப் பூசையும் நற்கருணைப்பவனியும் ஆசீர்வாதமும் முதல் நன்மைச் சடங்குகளும் இடம்பெறும்.

26ம் திகதிகாலை 6-45மணிக்கு புனிதரின் திருநாள் கூட்டுத் திருப்பலிப்பூசையும் திருச்சொரூபப்பவனியும் புனிதரின் ஆசீர்வாதமும் இடம் பெறும். விசேஷமாக நோயாளரை ஆசீர்வதிக்கும் திருச் சடங்கும் நடைபெறும்.

25ம் திகதி மாலை பத்தாண்டு ஆலய நிறைவினைச் சிறப்பிக்கும் மலர் வெளியீட்டு வைபவம் நடைபெறவுள்ளது. ஆலயத் திரு நாட்காலங்களில் பங்குபற்றப் பலபாகங்களிருந்து புனிதரின் அருள் பெறபக்தர்கள் கூடுவது இப்பகுதியின் சிறப்பு

(5-ம் பக்கம் பார்க்க)

## யாழ். மாவட்டத்தில்முஸ்லிம் வேட்பாளரை நிறுத்துவார்களா?

எதிர்வரும் மாவட்ட அபிவிருத்திச்சபைக்கான உறுப்பினரைத் தெரிவதற்குரிய தேர்தல்பற்றி மக்களிடையே பலவாறுன கருத்து வேறுபாடுகள் நிலவுகின்றன நாடு பூராவும் அங்கீகாரம் பெற்ற அரசியல் கட்சிகள் அனைத்தும் கூட்டுப் பொதுத் தேர்தலுக்கான வேட்பாளர் பட்டியலைத் தயாரிப்பதில் தீவிரமாகச் செயல்படுகின்றன. ஆளும் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர் பட்டியலைத் தயாரிப்பதில் நாளுக்கு நாள் பல தலைப்பிலான கருத்துக்களைப் பத்திரிகைகளில் படிக்கக்கூடியதாயுள்ளது.

முஸ்லிம்களுக்கு முன்னுரிமை வழங்கப்படவேண்டுமென இலங்கையிலுள்ள பல இஸ்லாமிய இயக்கங்கள் ஆளும் கட்சியைக் கேட்டுள்ளன. அநேகமாகக் கணிசமான அளவுக்கு முஸ்லிம்களுக்கான பிரதிநிதித்துவம் சகல கட்சிகளாலும் வழங்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது இருந்தும் வேட்பாளர் பட்டியலில் யாழ். மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் முஸ்லிம்களுக்குத் தகுந்த ஸ்தானம் வழங்கப்படும் எனக் கூறுவதற்கில்லை.

இந்நிலையில் தமிழர் விடுதலைக் கூட்டணி தனது வேட்பாளர் பட்டியலில் யாழ். முஸ்லிம் ஒருவருக்குத் தகுந்த ஸ்தானத்தை வழங்கும் எனக் கட்

5-ம் பக்கம் பார்க்க)

# மக்கள் கருத்து

## அன்று நடந்தது இன்று நடப்பது

### தமிழ் நாட்டில் தண்ணீர்

### கொழும்பில் நிதிவசூல்

கொழும்பிலே பல இடங்களில் தண்ணீருக்குத் தட்டுப்பாடு நிலவுவதை இன்றும் காணலாம்.

தமிழ் நாட்டைச் சேர்ந்த காயல் பட்டணத்திற்கு குழாய் மூலம் தண்ணீர் வழங்கும் வசதியை ஏற்பாடு செய்வதற்காக கொழும்பிலே பல பிரமுகர்கள் கூட்டமொன்று நடத்தினார்கள். முப்பத்தைந்து பேர் கூடி அதற்காக 12185 ரூபா வசூலித்தார்கள்.

(5-ம் பக்கம் பார்க்க)

# நாடும் நடப்பும்....

1970-ம் ஆண்டில் திருமதி சிறிமா பண்டாரநாயக்கா தலைமையில் ஐக்கிய முன்னணி அரசாங்கம் ஆட்சிபீடத்துக்கு வந்தபோது இலங்கையை ஒரு குடியரசு நாடாகப் பிரகடனப் படுத்தவேண்டுமென்றும் அதற்காகப் புதிய அரசியலமைப்பை உருவாக்குவதற்கும் முன்வந்தது இதற்காக அரசியல் நிர்ணயசபை கூட்டப்பட்டதற்கு இச்சபைக்கு அடிப்படைத் தீர்மானங்கள் பல சமர்ப்பிக்கப்பட்டன. ஜனாதிபதி பதவி பற்றிய தீர்மானத்துக்கு யாரோ சிலர் உப ஜனாதிபதி பதவியும் உருவாக்கப்படவேண்டுமென்றும் இப்பதவிக்கு சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த ஒருவர் தெரிவு செய்யப்படவேண்டுமென்றும் யோசனை கூறியதாக ஞாபகம்.

இந்தியாவில் ஜனாதிபதியாக வடநாட்டவர் ஒருவர் தெரிவு செய்யப்படும்போது தென்னாட்டவர் ஒருவர்தான் உப ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்படுவார் ஜனாதிபதி இறந்தாலோ அல்லது அவருடைய பதவிக்காலம் முடிந்து ஓய்வு பெற்றாலோ உதவி ஜனாதிபதியே ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பெறுவதும் அங்கு வழக்கமாக இருந்துவந்தது. தென்னாட்டவர் ஜனாதிபதி பதவிவகித்தால், வடநாட்டவர் ஒருவர் உப ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்படுவதும் இந்தியாவிலிருந்துவரும் நடைமுறை

ஐக்கிய முன்னணி அரசியல் தபால் தந்தி அமைச்சராக இருந்தவர் திரு. செல்லையா குமாரசூரியர், இப்போது சோஷலிஸ முன்னணி ஒன்றை உருவாக்கி வளர்த்துவருகிறார்.

இந்த நாட்டில் ஜனாதிபதியாகத் தமிழர் ஒருவரும் பதவி வகிக்க வேண்டுமென்ற விருப்பத்தை இப்போது திரு குமாரசூரியர் வெளியிட்டிருக்கிறார்.

பலருக்கும் பதவி போனபின்னர் தான் ஞானம் பிறக்கிறது போலும்! திரு குமாரசூரியர் அமைச்சராக இருந்தபோதே இந்த யோசனையை ஐக்கிய முன்னணி அரசிடம் முன்வைத்திருந்தால் நல்ல பயனைத் தந்திருந்தாலும் தந்திருக்கலாம்! காலம் மாறினாலும் மாறலாம்; குமாரசூரியரின் விருப்பமும் நிறைவேறலாம்! காலம் தான் பதில் சொல்ல வேண்டும்

பதினெட்டு வயதுக்கு மேற்பட்டவர்கள் எல்லோரும் தங்களுடைய அடையாள அட்டையைக் கைவசம் வைத்திருக்க வேண்டுமென்ற கட்டாயம் வரவிருப்பதாக ஒரு செய்தி கூறுகிறது. இது பல விதத்திலும் பயன் தரக்கூடியது தான். ஆனால் அதைப் பாதுகாப்பாக வைத்திருப்பதுதான் சங்கடம்

நான் அடையாள அட்டை பெற்ற நாளிலிருந்து நான் அதை எந்நேரமும் எனது பாக்கெட்டில் தான் வைத்திருக்கிறேன். சிலருக்கு காசுக்கட்டளைகள் மாற்றிக் கொடுக்கவும் அது உதவியிருக்கிறது.

ஆனால் அந்த அடையாள அட்டையின் நிறமும் உருவமும் மாறிக் கொண்டு வருகிறது. ஓரமெல்லாம் மடிந்து கிழிந்துபோகும் நிலைக்கும் வந்துகொண்டிருக்கிறது. இதற்கு என்ன செய்வது?

ஊர்சுற்றி

# பாகிஸ்தானுக்கு அமெரிக்கா 250 கோடி டாலர் இராணுவ, பொருளாதார உதவி வழங்கமுடிவு

## பாக். வெளியுறவு அமைச்சர் தகவல்

வாஷிங்டன், ஏப். 22

அமெரிக்கா பாகிஸ்தானுக்கு 250 கோடி டாலர் பெறுமதியான இராணுவ பொருளாதார உதவிகளையும் வழங்கும்.

இவ்வாறு பாகிஸ்தான் வெளிநாட்டமைச்சர் ஜனுப் ஆஹா ஷாக்கி வாஷிங்டனில் தெரிவித்தார்.

இதேசமயம்பாகிஸ்தானுக்கு அமெரிக்கா 250 டாலர் பெறுமதியான இராணுவ உதவிகளை வழங்கஉள்ளதாக ஊர்ஜிதமற்ற செய்திகள் தெரிவிக்கின்றன

அமெரிக்க வெளிநாட்டு அமைச்சர் திரு. அலெக்சாண்டர் ஹெய்க்குடன் 2 நாட்கள் பேச்சுவார்த்தை நடத்திய பின்னர் பத்திரிகையாளர்களிடம் பேசுகையிலேயே ஜனுப் ஆஹா ஷாக்கி மேற்கண்டவாறு கூறினர்.

பாகிஸ்தானுக்கு அமெரிக்கா இராணுவ பொருளாதார உதவிகளை 5 ஆண்டுத் திட்ட அடிப்படையில் வழங்கதிட்டமிட்டுள்ளது என்றும் ஜனுப் ஆஹா ஷாக்கி கூறினர். (இ)

## மதுவிலக்கு தோற்றுவிட்டது

சென்னை, ஏப். 22

தமிழக சட்டமேல்சபையில் மதுவிலக்கு திருத்தமசோதா நேற்று நிறைவேற்றப்பட்டது.

சட்டப்பேரவையில் இச்சட்டமூலம் ஏற்கனவே நிறைவேற்றப்பட்டுவிட்டது.

இம் மசோதா மீதான விவாதத்தில் பேசிய வருவாய்த்துறை அமைச்சர் திரு. எஸ். சோமசுந்தரம் மதுவிலக்கு தோல்வியுற்றுவிட்டது. கள் ஒச்சாராய வர்த்தகத்தை அறவே அழிக்கவே மேற்படி சட்டம் அமுலுக்கு கொண்டு வரப்படுகிறது என்றார். (இ)

## உதவி அரசாங்க பிரிவுகளில் மாதிரிவிளையாட்டு மைதானம்

(பச்சிலைப்பள்ளி)

விளையாட்டுத் துறையை ஊக்குவிப்பதற்காகவே அரசாங்கம் உதவி அரசாங்க அதிபர் பிரிவு தோறும் மாதிரிப் பயிற்சி விளையாட்டு மைதானத்தை அமைத்து வருகிறது.

பச்சிலைப்பள்ளி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள விளையாட்டுக் கழகங்களுக்கிடையே நடைபெற்ற விளையாட்டுப்போட்டியில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றிய யாழ். மாவட்ட விளையாட்டுத்துறை அதிகாரி திரு. எஸ். மரியதாஸ் இவ்வாறு கூறினர்.

இவ்விழாவுக்குபச்சிலைப்பள்ளி உதவி அரசாங்க அதிபர் திரு எஸ். முருகவேல் தலைமை தாங்கினர்.

திரு. மரியதாஸ் தொடர்ந்து உரையாற்றும்போது கூறியதாவது:

அரசாங்கம் வருடந்தோறும் ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள விளையாட்டு மைதானங்களின் அபிவிருத்திக்காக 50 ஆயிரம் ரூபா ஒதுக்கீடு செய்து வருகிறது. இப்பணம் அம் மாவட்டத்திலுள்ள பாராளுமன்ற உறுப்பினர்களின் சிபாரிசின்பேரில் விளையாட்டுக் கழகங்களுக்குப் பங்கீடு செய்யப்படுகிறது.

இங்கு பெண்கள் 800 மீற்றர் ஓட்டப் போட்டியில் கலந்து கொண்டது சிறப்பம்சமாக உள்ளது. அநேக இடங்களில் இந்நிகழ்ச்சிரத்துச் செய்யப்பட்டு வருகின்றபோதிலும் இப்பகுதி பெண்கள் துணிந்து இந்நிகழ்ச்சியில் பங்கு பற்றி மிகத் திறமையாகச் செய்து முடித்துள்ளார்கள்.

போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு திரு. மரியதாஸ் பரிசில்களை வழங்கினர்.

ஆண்கள் பிரிவில் வத்திராயன் செல்வா விளையாட்டுக் கழகமும் பெண்கள் பிரிவில் கலைமகள் விளையாட்டுக்கழகம் ஆதவன் விளையாட்டுக்கழகம் ஆகியனவும் முதலாமிடத்தைப் பெற்றன

சிறந்த விளையாட்டு வீரராக செல்வா விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த திரு க. தவராசாவும், சிறந்த வீராங்கனையாக கலைமகள் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த செல்வி: தயாநிதியும் தெரிவு செய்யப்பட்டார்கள். பளைப் பகுதி விளையாட்டுப் போதனாசிரியர் திரு தோ. சவரிமுத்து நன்றியுரை வழங்கினர். (இ)

## இப்படியும் நடக்கிறது

யாழ் நகரிலுள்ள ஒரு பாடசாலை அதிபருக்கு வட பிராந்திய கல்விப் பணிப்பாளரிடமிருந்து, இம்மாதம் ஆறாந் திகதியிடப்பட்டு ஒரு கடிதம் வந்தது. அந்தக் கடிதத்தில், குறிப்பிட்ட அதிபர், பதவியிலிருந்து விலகிக்கொண்டதாக எழுதப்பட்டிருந்தது.

நிலைமை இவ்வாறிருக்க, இவ்வார ஆரம்பத்தில் இதே அதிபருக்கு ஏப்ரல் மாதச் சம்பளப்பத்திரமும், அதிபரின் தனிப்பட்ட பெயருக்கு பாடசாலை அதிபர், ஆசிரியர்களுக்கான ஏப்ரல் மாதச்சம்பளமும் அதிபரின் தனிப்பட்ட பெயரில் காசோலை மூலமாக அனுப்பப்பட்டிருந்தது.

அதிபரும் உடனடியாகவே காசோலையை மாற்றி, தனது சம்பளத்தைப் பெற்றுக்கொண்டதுடன், உதவி ஆசிரியர்கள் எட்டுப்பேரினதும் சம்பளத்தையும் நேரில் வழங்கிவிட்டார்.

விஷயம் இத்தோடு முடிவதாக இல்லை.

மீண்டும் ஒரு கடிதம் அந்த அதிபரின் வீட்டு விலாசத்துக்கு வந்திருந்தது. இருபதாம் திகதி இடப்பட்ட அந்தக் கடிதத்தில் "உடனடியாக 'செக்கை' திருப்பி அனுப்புக" என்று வடபிராந்தியக்கல்விப்பணிப்பாளர் கேட்டிருக்கின்றார்.

இப்படியும் ஒரு குளறுபடியா?

ஊடுருவி.

## இளம் பெண் தற்கொலை

(மன்னார்)

வீட்டு வேலை செய்யாதிருந்த மகளைத் தந்தை ஏசினார் மனமுடைந்த மகள் நஞ்சுத்திராவகம் அருந்தித் தற்கொலை செய்து கொண்டார்.

மன்னார் தோட்டக் காடுப் பகுதியில் இடம் பெற்ற இச் சம்பவத்தில் ராணி (வயது17) என்பவரே தற்கொலை செய்து கொண்டவராவர்.

இம் மரணம் தொடர்பாக மரண விசாரணை நடத்திய திடீர் மரண விசாரணை அதிகாரி ஜனுப் எம்.பி.ஏ ஜப்பார் தற்கொலை என்று தீர்ப்பளித்தார்.

## மேற்கத்திய நாடுகள்

## போலந்தில் நாசகார செயல்களுக்குத் தூபம்

### சோவியத் சஞ்சிகை குற்றச்சாட்டு

மாஸ்கோ, ஏப். 22

போலந்தில் மேற்கத்திய ஸியோனிஸ வாதிகள் நாசகார நடவடிக்கைகளுக்குத் தூபமிட்டு வருகின்றனர்.

இவ்வாறு சோவியத்சஞ்சிகை ஒன்று குற்றம்சாட்டியுள்ளது.

போலந்தில் ஏற்பட்டுள்ள மக்கள் புரட்சியைத் தோல்வியுறச்செய்யும் முயற்சியிலும் மேற்கத்திய ஸியோனியவாதிகள் ஈடுபட்டுவருகிறார்கள் என்றும் இந்நாடுகள் எவ்வாறுதான் முயற்சித்தபோதிலும் அவர்களுக்கு நிச்சயம் தோல்வியே கிட்டும் என்றும் அப்பத்திரிகை மேலும் கூறியுள்ளது. (இ)

## நியமனப்பத்திரங்கள்

## காங்கிரஸ் இறுதி நாளன்றே சமர்ப்பிக்கும்

### குமாரும் போட்டியிடுவார்

(யாழ்ப்பாணம்)

தமிழ் காங்கிரஸ் யாழ். மாவட்டத்திற்கான நியமனப் பத்திரங்கள் இறுதிநாளான 27ம் தேதி காலை சமர்ப்பிக்கப்படும் என்றும் அன்றைய தினமே தமிழ் காங்கிரஸ் முல்லைத்தீவு, மன்னார், வவனியா மாவட்டங்களுக்கான நியமனப்பத்திரங்கள் அந்தந்த மாவட்ட அரசாங்க அதிபர்களிடம் கையளிக்கப்படும் என்றும் தமிழ்காங்கிரஸ் பிரசார செயலாளர் திரு மாணிக்கசோதி தெரிவித்தார்.

ஆதரவாளர்களின் வேண்டுகோளை தொடர்ந்து தமிழ் காங்கிரஸ் பொதுச் செயலாளர் திரு குமார் பொன்னம்பலம் மாவட்டசபை தேர்தலில் போட்டியிட சம்மதம் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாண மாவட்ட பட்டியல் இவ்வார இறுதியில் பூர்த்தியாகும் என்றும் முல்லைத்தீவு, மன்னார், வவனியா மாவட்ட பட்டியல்கள் பற்றியும் ஆராயப்பட்டுவருவதாக திரு. குமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

கொழும்பு மாவட்டத்தில் போட்டியிடுவதில்லை என முடிவு செய்யப்பட்டிருப்பதாகவும் அவர் கூறினர்.

தமிழ்க்காங்கிரஸ் பிரசார செயலாளர் திரு. மாணிக்கசோதி மன்னார், முல்லைத்தீவு, வவனியா மாவட்டங்களுக்கு இவ்விடயம் தொடர்பாக மீண்டும் செல்லவிருக்கிறார். (ஈ)

# சவூதிக்கு ஐந்து அமெரிக்க ராடர் விமானங்கள்

## காங்கிரஸின் எதிர்ப்பையும் பொருட்படுத்தாது றீகன் முடிவு

வாஷிங்டன், ஏப். 22

அமெரிக்க அதிபர் திரு. ரொனல்ட் றீகன் காங்கிரசின் எதிர்ப்பையும் உதாசீனம் செய்துவிட்டு 5 ராடர் விமானங்களை சவூதிஅரேபியாவுக்கு விற்பனைசெய்யத் தீர்மானித்துள்ளார்.

விமானங்களின் வருகையை முன்கூட்டியே அறிந்து எச்சரிக்கைசெய்யக்கூடிய ரடார் உபகரணங்கள் கொண்ட இந்த ஐந்து விமானங்களும் ஏற்கனவே சவூதிஅரேபியாவில் இருக்கும் 'எட்-15' யுத்த விமானங்களுக்கு பக்கபலமாக இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டது.

சவூதி அரேபியாவுக்கு இவ் விமானங்களை விற்பனைசெய்யும் திரு. றீகனின் தீர்மானத்தை அமெரிக்க ஜனப்பிரதிநிதிகள் சபையும் செனட் சபையும் எதிர்த்தாலன்றி இவ் விற்பனையை வேறு எவ்வழிலும் நிறுத்தமுடியாது என்று வெள்ளைமாளிகையின் பத்திரிகைச்செயலாளர் திரு. லரிஸ்பீக்கர் தெரிவித்தார்.

## புயலினால் 2கோடி இழப்பு

புவனேஸ்வரம், ஏப், 22

ஒரிஸ்ஸாவில் கடந்த வாரம் ஏற்பட்ட புயல் காரணமாக 2 கோடி ரூபாவுக்குமேல் இழப்பு ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது

இப் புயல்காற்றுக்கு நூற்றுக்கணக்கானேர் பலியானது தெரிந்ததே!

## அமைச்சருக்குக் கோரிக்கை

(மன்னார்)

"ஆழ்கடலில்மீன்பிடிக்கச்செல்லும் மீனவர்களுக்கு ஏற்படும் ஆபத்துக்களைத் தவிர்ப்பதற்கு உதவியாகவுள்ள வானொலி, தொலைபேசி இணைப்புகளை இறுவைப்படகுகளில் இணைப்பதற்கு உடனடியாக நடவடிக்கைஎடுக்கவும்."

இவ்வாறு கடற்றொழில் விருத்தி மதிப்புரைச் சபை உறுப்பினர் ஜனுப்.என் எஸ் எம்.கௌது கடற்றொழில் அமைச்சைக் கோரியுள்ளார்.

## பாராளுமன்றம் இன்று கூடுகிறது

(கொழும்பு)

பாராளுமன்றம் இன்று பிற்பகல் 3 மணிக்குகூடுகிறது. 10 மசோதாக்கள் இரண்டாம் வாசிப்பு விவாதத்துக்காக இன்று எடுத்துக்கொள்ளப்படவுள்ளன. (து)

## பொன்விழாப் போட்டி முடிவுகள்

(ஊரெழு)

மே மாதத்தில் நடைபெறவிருக்கும் ஊரெழு கணேசவித்தியாசாலையின் பொன் விழாவையொட்டி மேற்படி பாடசாலையின் மாணவர்களுக்கிடையே நடாத்தப்பட்ட போட்டிகளின் முடிவுகள்:- கட்டுரைப்போட்டி கீழ்ப்பிரிவு க சுமதிலோ கவிதாசா. சர்பா மத்திய பிரிவு:சி. வளர்மதி, சி. சிவனேஸ்வரி' இ, குமரன். மேற்பிரிவு;சி சகிலா, த. மதிவதனு, க. வசந்தி. பேச்சுப் போட்டி; பாலர்பிரிவு கு. சியாமளா, கி ஜிதா, சி. ஆதவன். கீழ்ப்பிரிவு: ய. ஜெயந்தி, க. பிரயா, இ. குமுதினி மத்திய பிரிவு: த விக்னேஸ்வரி' இ ஜெயமனோகரி, இ வளர்மதி மேற்பிரிவு: த. மதிவதனு, க. வசந்தி சி, சகிலா. ஆங்கில கட்டுரைப் போட்டி க. வசந்தி, க. நந்தினி சி. சகிலா. ஆங்கில பேச்சுப் போட்டி; சி. சிவனேஸ்வரி, சி. பிரேமலதா, இ ராஜினி. போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்குபரிசில்கள்பொன் விழாவில் நடைபெறும் பரிசளிப்பு வைபவத்தின் போது வழங்கப்படும்.

வெலிங்டன் (யாழ்நகர்)
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர்-கே. ஆர். விஜயா
நல்லநேரம்

லிடோ யாழ். நகர்
தினசரி 10-30, 2-15, 4-45, 7-00, & 9-45
PERFECT FRIDAY
(வயதுவந்தவர்களுக்கு)

Today Only
SANTHI JAFFNA 10-30 2-30 4-30 & 9-30
A HAUNTING VISION OF REINCARNATION
MARSHA MASON — ANTHONY KOPKINS
"AUDREY ROSE"
(More Suited For Adults)
அடுத்தவெளியீடு புத்தம் புதியபிரதி 'அரசிளங்குமரி'

ராணி (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-00, 6-00, 9-30
50-வது நாளை நோக்கி
ரஜனி காந்த் ★ ஷோபா
ஸ்ரீபிரியா ★ சுமன்
சௌகார் ஜானகி நடித்த
தீ
இலங்கை-இந்திய தயாரிப்பு

வின்ஸர் (யாழ்ப்பாணம்)
2வது கொட்டகை நிறைந்த காட்சி வாரமாக நடைபோடுகிறது.
தினசரி 4 காட்சிகள்
10-30, 2-30, 6-00, 9-30
சிவாஜி ★ கே. ஆர். விஜயா
★ தேங்காய் சீனிவாசன் ★ மனோரமா
★ சுந்தரராஜன் நடித்த
ரிஷிமூலம்
(வண்ணப் படம்)
பார்த்தவர்கள் நாவில் என்றும் ஒலிப்பது
'ஐம்பதிலும் ஆசை வரும் ஆசையுடன் பாசம் வரும்....
கானத் தயாராகுங்கள்.

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-00, 6-00, & 9-30
★ சிவாஜி ★ ஜெய்கணேஷ் ★ ஸ்ரீதேவி
★ ஜெயசுதா ★ சுந்தரராஜன் ★ சௌகார்ஜானகி
பட்டாக்கத்தி பைரவன்
(வண்ணப்படம்)

மனோகரா தினசரி 4 காட்சிகள் (யாழ்ப்பாணம்)
★ சிவாஜி ★ ஸ்ரீதேவி ★ பிரமிளா
★ சுந்தரராஜன் விஜயகுமார்
★ ரவிச்சந்திரன் மற்றும் பலர் நடித்த
'தீப்பொறி' பறக்கும் வண்ணப்படம்
கவரிமான்

ஹவுஸ் புல்! ஹவுஸ் புல்!! ஹவுஸ் புல்!!!
ராஜா யாழ்ப்பாணம் சாந்தி மட்டுநகர்
நாங்கள் திரையிட்டப்பட்ட படங்களில் முன்னணியில் உள்ளது பெண்கள் கூட்டம் அலைமோதுகிறது.
தினசரி 10-30, 2-15, 6-15, 9-30 — தினசரி 2-30, 6-15, 9-30
● பாக்யராஜ் ● ரதி ● சுதிர்
புதிய வார்ப்புகள்
(ஈஸ்ட்மன் கலர்) வயது வந்தவர்களுக்கு உகந்தது
டைரக்ஷன்; பாரதிராஜா இசை; இளையராஜா


# இன்றைய பலன்

சித்திரை மாதம் 11-ம் திகதி
வியாழக்கிழமை
(23-4-1981)

மேடம்: அரச பயத்துக்கு இடமுண்டு, வழக்கு விவகாரங்களில் மாட்டிக் கொள்ள வேண்டாம், மின்னியல்பொறியியல் பகுதிகளில் கடமையாற்றுபவர்கள் அதிககவனம் எடுக்கவும்.

இடபம்: திருப்திகரமான திருப்பத்திற்கு இடமுண்டு, விருந்தினர்களின் வருகைக்கும் உறவினர்களின் ஆதரவுக்கும் இடமேற்படும். பரோபகாரச் சிந்தை மேலிடும், மகிழ்ச்சிகரமான தினம்.

மிதுனம்: இதமான வாழ்வு இன்சொல் இவற்றுடன் பெரியோர்களின் ஆதரவும் தாராளமாகக் கிடைக்கும்; செய்தொழிலாலும் சிறப்புண்டு. மேலதிகாரிகளும் உதவிக்கு முன்வருவார்கள்.

கடகம்; மதிப்பு உயரும், இதயத்தில் இனிமை தவழும், அறிஞர்களின் ஆதரவு தாராளமாகக் கிடைக்கும், எவ்வித சிக்கலான பிரச்சினையையும் பேச்சுவன்மையினால் சமாளித்து விடுவீர்கள்.

சிங்கம்: துன்பத்தின் ரேகைகள் படரும், எதிலும் தயக்கம் ஏற்படும், ஆதரவு கொடுத்தவரே முடிவில் கையை விரிக்கக் கூடும், கடன் தொல்லை அதிகரிக்கலாம், நிதானம் வேண்டும்.

கன்னி: குமுறும் நெஞ்சுடன் நாளைக் கடத்துவீர்கள், சிறு விடயத்திற்குக் கூட மற்றவர்கள் குறை கூறுவார்கள், வாத ரோகத்திற்கு இடமளியாது நடந்துகொள்ளவும், சுமாரான நாள்.

துலாம்: ஒளிமயமான சூழ்நிலை உருவாகும், வீட்டிலுள்ளவர்களின் அன்பும் ஆதரவும் தாராளமாகக் கிடைக்கும், இருமனம் கலந்தவர்கள் மத்தியில் இனிமையான சம்பவம் இடம்பெறும்.

விருச்சிகம்; நினைத்தகாரியத்தில் தடை ஏற்படுவது தவிர்க்க முடியாததாகும், சிலரின் தண்டனைகளுக்கு இலக்காக நேரிடலாம், மனத்திடம்விரும்பத்தக்கது.

தனு: அன்னையின் அன்பு தாராளமாகக் கிடைக்கும், செய்காரியங்களில் தனி புகழ் பரவும், முயற்சியால் முன்னேற்றத்துக்கு இடமுண்டு, கல்விப்பணி செல்வாக்கை வளர்க்கும்.

மகரம்: எப்பக்கம் திரும்பினாலும் ஆதரவு கொடுப்பதற்கு அன்பர்கள் முன்வருவார்கள், பொதுமக்கள் மத்தியில் நல்ல மதிப்பு ஏற்படலாம், தங்கள் செல்வாக்கில் பிள்ளைகளுக்கும் பெரும்பங்கு இருக்கும்.

கும்பம்: ஏமாற்றத்தின் எதிரொலி பழிவாங்கும் உணர்ச்சியைத் தூண்டும், எதிலும் விரக்தி மனப்பான்மை தென்படும், வேண்டாத நடவடிக்கையின் மூலம் நண்பர்களைப் பகைத்துக்கொள்ள நேரிடும்.

மீனம்: பிரிந்தவர்கள் வாழ்க்கையில் மீண்டும் இணைவர், குடும்பப் பிரச்சினைகளில் சுமுகமான நிலை ஏற்படும், சுற்றுடலிலும் வேண்டியதைச் சாதிக்கக் கூடியநிலை ஏற்படும்.

சோதிடக் கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை


நாகம்ஸ் (சுன்னாகம்)
தினசரி 6-30 9-30
சனி, ஞாயிறு 2-30
எம். ஜி. ஆர்.-லதா
மீனவநண்பன்
(ஈஸ்மன் கலர்)

வெஸ்லி (சாவகச்சேரி)
தினசரி 6-15, 9-30,
சனி ஞாயிறு 2-30
சந்திரமோகன்-
ஜெயப்பிரதா
சிரிக்கும்சலங்கை
(புதியபிரதி-கலர்)


# நடப்பு வருட நிர்வாகிகள்

(காரைநகர்)

நீலிப்பந்தனை அம்பாள் சனசமூக நிலையத்தின் பொதுக் கூட்டம் அண்மையில் நடைபெற்றபோது நடப்பு வருடத்திற்கான நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

போஷகர்கள்;-வட்டு எம். பி. திருநாவுக்கரசு, அ முருகேசு, நா. செல்வரத்தினம், கே. வி. விஜயசிங்கம்.

தலைவர்: சு மோகன்ராஜ் உபதலைவர்: த சிவ ராசேஸ்வரன். செயலாளர்: க அற்புதராசா, உபசெயலாளர்; ம அழகேந்திரம் பொருளாளர்: இ சிவதாசன் உப-பொருளாளர்; சு வேலாயுதபிள்ளை கணக்குப்பரிசோதகர்: செ சிவபாலன் விளையாட்டுச்செயலாளர்: ம மனோகுமார்.

## யாழ். ..

3-ம் பக்கத் தொடர்ச்சி

சிக் கொள்கை அளவில் ஐயமின்றி எதிர்பார்க்கலாம். அம்பாறை, மட்டக்களப்பு திருமலை, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில் நடைபெறவிருக்கும் குட்டிப் பொதுத் தேர்தல் பந்தயங்களில் குதிக்கவிருக்கும் கூட்டணி, தனது வேட்பாளர் பட்டியலில் முஸ்லிம்களின் நிலைபற்றிக் குறிப்பிட்டுள்ளது ஆனால் யாழ் மாவட்ட முஸ்லிம்களுக்குரிய நிலையை இதுவரை குறிப்பிடவில்லை. மாற்றுக் கட்சிகள் யாவும் யாழ் முஸ்லிம்களுக்கான பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்தியும் ஒரு முஸ்லிமாவது உறுப்பினராகும் வாய்ப்புக்குரிய ஸ்தானம் கொடுபடடதாயில்லை. தமிழைப் பேசும் சகல சமூகத்தினரதும் வாய்ப்பு, வசதிகளுக்காகக் குரல் கொடுக்கும் ஒரே கட்சியான கூட்டணி முஸ்லிம்களை ஒதுக்கிவிடாது உறுப்பினராவதற்குரிய அந்த ஸ்தானத்தை வழங்கும் என்பது திண்ணம்.

கடந்த பொதுத் தேர்தலில் வடமாநிலப்பகுதிகளில் மக்களால் தெரியப்பட்ட பேரவை உறுப்பினர் யாவரும் கூட்டணி சார்பில் போட்டியிட்டவர்களே இவர்களுள் முஸ்லிம் உறுப்பினர் எவரும் இல்லாத காரணத்தால் மாவட்ட அபிவிருத்திச்சபையிலாவது ஒரு முஸ்லிம் உறுப்பினரை உருவாக்கவேண்டுமென்பது என் கருத்து.

யாழ். மாவட்ட முஸ்லிம்களைப் பொறுத்தமட்டில் கூட்டணியின் சட்டபூர்வ நடவடிக்கைகளில் ஈடுபட்டுக் கட்சியின் வளர்ச்சிக்காகப் பூர்வாங்க ஒத்துழைப்பை நல்கிவரும் பிரமுகர் வரிசையில் ஒருவரைக் குறிப்பிட்டுக் கூறலாம் இவரது சுயநலமற்றதும் அப்பழுக்கற்றதுமான பணிகள் யாழ்ப்பாண வட்டாரப்பகுதியில் பரவலான செல்வாக்கை வளர்த்துள்ளன. இவரை இஸ்லாமியர் என்றுமட்டும் எடைபோட்டுவிடாது ஏனையவர்க்கும் பொதுவானவர் என்ற நிலையில் கணித்து வேட்பாளர் பட்டியலில் வேண்டாவெறுப்பாக இல்லாமல் தகுந்த எண்ணுக்குரிய ஸ்தானத்தில் இருத்திக் கொள்கை விளக்கத்தை உறுதிப்படுத்துமாறு வேண்டுகிறேன்

ஏ. எல். குணநாயகம்
இராசாவின் தோட்டம்,
யாழ்ப்பாணம்.


ஹரன் யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
ரஜனிகாந்த்—ஷோபா
நடித்த
முள்ளும் மலரும்
போன்:881 (கலர்)


# அமைச்சர் திறந்துவைப்பார்

(வவுணதீவு)

புதுநகர் ஆனந்தா சனசமூக நிலையத்திற்கான புதிய கட்டடத்தை பிராந்திய அபிவிருத்தி அமைச்சர் திரு. செ. இராசதுரை 26ம் திகதி திறந்து வைப்பார் இவ் வைபவத்திற்கு நிலையத் தலைவரும் திமிலைதீவு -அஞ்சலதிபருமான திரு. ஜே' பிள்ளை தலைமைவகிப்பார்.

# கருத்தரங்கு

(மன்னார்)

தலைமன்னால் கிறிஸ்தவப் பெண்களுக்கான கருத்தரங்கொன்று அண்மையில் வண பிதா அலோசியஸ்தலைமையில் நடைபெற்றது தலைமன்னார் புனிலோறன்ஸ் மண்டபத்தில் நடைபெற்ற இக் கருத்தரங்கில் ஏராளமான கிறிஸ்தவப் பெண்கள் கலந்து கொண்டதுடன் பல தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

# பால் கொள்வனவு நிலையம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்புத் தொகுதியில் உன்னிச்சை என்னுமிடத்தில் ஆரம்பிக்கப்பட்ட பால்கொள்வனவு நிலையம் விரைவில் திறந்து வைக்கப்படவுள்ளது.

## தமிழ்நாட்டில்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையில் பிறபாகங்களில் வசிப்பவர்களிடமிருந்தும், அது போல் பல தேசங்களில் இருப்பவர்களிடமிருந்தும் இதே நோக்கத்திற்காகப் பணம் திரட்ட வேண்டுமெனவும் முடிவுசெய்யப்பட்டது.

கொழும்பிலே 75 ஆண்டுகட்கு மேலாக இருந்த தண்ணீர்க் குழாய்கள் தற்போது சுத்தஞ் செய்யப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது.

வி. கே. நவசோதி

## அரியாலை...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

நாளாகும்.

பலபாகங்களிலும் இருந்து வரும் பக்தர்களுக்கு யாத்திரைத்தலமாக விளங்கும் இத்தலம் யாத்திரிகர் தங்கிச்செல்ல வசதிகொண்டது. பக்தர்களின் வேண்டுதலுக்கு இப்புனிதர் வழியாக அருள் கிட்டி வருவதல் மாதத்தின் முதல் வெள்ளிக்கிழமைகளிலும் சித்திரைக்கடைசி ஞாயிற்றுக் கிழமைகளிலும் புனிதரின் தினங்களாக அனுஷ்டிக்கப்படுகிறது.

புனிதரின் சிந்தனைகளையும் பெருமைகளையும் கூறுமிடத்தில் திருச்சபையால் இப்புனிதரை "கைவிடப்பட்டவர்களின் பாதுகாவலர்" எனவும் யேசுக்கிறிஸ்துவின் கடைசி ராப்போசனத்தில்கலந்து கொண்ட பன்னிரண்டு அப்போஸ்தலரில் ஒருவராகவும் யேசுவின் நெருங்கிய உறவினராகவும் உள்ளார் என்பதனை அறியக் கூடியதாகவுள்ளது.

புனித யூதா ததேயூ என்னும் பெயருக்கு அர்த்தம், அன்பு நிறைந்தவர். தயாள சிந்தை உள்ளவர் என்பதாகும் இப்புனிதரின் தொண்டு யூதேயா, சமேரியா, இதுமியா, சீரியா, மொசப்பத்தேமியா போன்ற தேசங்களில் காட்டுமிராண்டிகளாக மூடநம்பிக்கையுடன் சீவித்த மக்களை சீர்திருத்தமுள்ள இறைமக்களாக சீவிக்கக்கற்பித்தது.

இப்புனிதரின் இனத்தை நினைவுகூரும் இந்நாளில் அவரது சிந்தனைகளையும் திருமறை உணர்வையும் ஏற்படுத்த அவரது அருள்வாழ்வை எமது வாழ்வுக்கு வழிகாட்டும் நினைவாக எண்ணி புனிதரின் துணையோடு இறைவனை வேண்டுவோம்.

— செ. யோசேப் பாலா

ஈழநாடு
The Eelanaadu 60 சதம்

## இராமநாதபுர கலவரம் 6 பேர் பலி

சென்னை, ஏப், 22

ராமநாதபுரம் மாவட்டத்தில் இடம் பெற்ற கலவரங்களால் பலியானவர்களின் எண்ணிக்கை ஆறாக அதிகரித்துள்ளது.

## யாழ்ப்பாணத்தில் மூன்று மாத காலத்தில் 62 வீதி விபத்துக்கள்!

### மூவர் மரணமடைந்தனர்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் கடந்த 3 மாதகாலத்தில் 62 வீதி விபத்துக்கள் நடந்துள்ளதாக போக்குவரத்துப் பிரிவு இன்ஸ்பெக்டர் திரு யோகு குமார் தெரிவித்தார்

இந்த விபத்துக்கள் பஸ், மினி பஸ், மோட்டார் சைக்கிள், டிராக்டர், சைக்கிள்களால் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இவ்விபத்துக்களில் 3 சம்பவங்களில் மட்டும், மரணம் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மோட்டார்சைக்கிள் செலுத்திய ஒருவரும், மினிபஸ்ஸினால் மோதப்பட்ட ஒருவரும், மோட்டார் சைக்கிளால் மோதப்பட்ட ஒருவரும் மரணமானார்கள் என்றும் அவர் தெரிவித்தார். (இ)

## ஐக்கிய தேசியக் கட்சி - கூட்டணி - சுதந்திரக் கட்சி:

# நியமனப்பத்திரங்கள் நாளை தாக்கலாகும்!

(யாழ்ப்பாணம்)

ஐக்கிய தேசியக்கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி வேட்பு மனுக்கள் நாளை தாக்கல் செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது

தமிழர் விடுதலைக் கூட்டணி, வேட்புமனுக்களை நாளை தாக்கல் செய்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருகிறது.

யாழ். மாவட்டத்திற்கான வேட்பு மனுக்களை, தமிழர்விடுதலைக் கூட்டணிச் செயலாளர் நாயகமும், எதிர்க்கட்சித் தலைவருமான திரு. அ அமிர்தலிங்கம் நாளை தாக்கல் செய்வார்.

ஐக்கிய தேசியக்கட்சிக்கான வேட்பு மனுக்கள் நாளைகாலை தாக்கல் செய்யப்படும் என்று ஐக்கிய தேசிய கட்சி, பொதுச் செயலாளர் திரு. ஹர்ஸா அபயவர்த்தன தெரிவித்துள்ளார்.

சுதந்திரக்கட்சியின் யாழ்ப்பாணமாவட்டத்திற்கான வேட்பாளர் மனு பட்டியலில் பிறபகல், சுதந்திரக்கட்சி பட்டியலில் முதலாவது இடம் பெறும் திரு. முருகையா வையலிப்பிள்ளை தொடர்பான விடயங்களை கலைக்க திரு முருகையா நேற்று கொழும்பு சென்றுள்ளார்.

சுதந்திரக்கட்சி சார்பில் யாழ்ப்பாணத்தில் போட்டியிட சுமார் 20 பேர் விண்ணப்பித்துள்ளனர் சகலவிபரங்களும், கட்சிமேலிடத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

சுதந்திரக்கட்சியின் முல்லைத்தீவுமாவட்டத்திற்கான பட்டியல் ஒழுங்குகளை திரு. பாலமனோகரனும் வவுனியாமாவட்டத்திற்கான ஒழுங்குகளை திரு. நடராசாவும் மன்னார்மாவட்டத்திற்கு ஐனூப்பாசிமும் செய்துள்ளனர்.

யாழ்ப்பாணம் தவிர்ந்த ஏனைய இடங்களில் கூட்டணி பட்டியலில் மற்றும் மாவட்டங்களுக்கான நியமனப்பத்திரங்களை, பட்டியலில் முதலாவதாக இடம்பெறுபவர் கையளிப்பார்.

முன்னாள் அமைச்சர் திரு. செ. குமாரசூரியரின் சோஷலிச முன்னணி இன்று யாழ். நகரில் கூடி யாழ் மாவட்டத்திற்கான தங்களது பேட்பாளர்கள் குறித்து இறுதிமுடிவு செய்யும். (கு)

## "சிமெந்து விநியோகத்தில் பாகுபாடு கிடையாது"

### நல்லூர் ப, நோ. கூ. ச. தலைவர் விளக்கம்

(யாழ்ப்பாணம்)

"நல்லூர் பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் சிமெந்து விநியோகத்தில் எந்த விதமான பாகுபாடோ அல்லது மாற்றாந் தாய் மனப்போக்கோ கடைப்பிடிக்கப் படுவதில்லை" என்று நல்லூர் ப. நோ. கூ. சங்கத்தலைவர் திரு. ந அருணாசலம் தெரிவித்துள்ளார். இது சம்பந்தமாக அவர் அனுப்பிவைத்துள்ள விளக்கத்தில் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

ஆனால் 1-3-81லிருந்து தாக்கம் சிமெந்திற்கு ஏற்பட்ட தட்டுப்பாடு காரணமாக கோண்டாவில் பகுதியில் ஐந்து கிளைகள் மூலம் விநியோகம் செய்து வந்த சிமெந்தை நான்கு கிளைகள் மூலம் விநியோகம் செய்து வருகிறது போதியளவு சிமெந்து கிடைக்கும் காலங்களில் நிர்வாக ரீதியில் பரவலான அடிப்படையில் விநியோகம் செய்ய வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டு நடைமுறைப் படுத்தப் பட்டு, வருகிறது தற்போது சிமெந்து விநியோகம் தற்காலிகமாக நிறுத்தப் பட்டுள்ள கோண்டாவில் கிழக்கு நாகபூஷணிக் கிளைக்கு அக்கிளையின் நிர்வாகக்குழுவினர் தங்கள் கிளை நட்டத்தில் இயங்குவதைத் தவிர்க்க சிமெந்து விற்பனையை மேற்கொள்ளவேண்டும் என்று விடுத்த நியாயமான வேண்டுகோளுக்கிணங்க (அச்சமயம் சிமெந்திற்கு எதுவித தட்டுப்பாடின்றி போதியளவு கிடைக்கப்பெற்றமையால்) அங்கு சிமெந்து விநியோகம் மேற்கொள்ளப் பட்டது. ஆனால் தற்போது சிமெந்துக்குத் தட்டுப்பாடும் கட்டுப்பாடும் நிலவுவதால் அக்கிளைக்கான சிமெந்து விநியோகம் தற்காலிகமாக இடைநிறுத்தம் செய்யப் பட்டுள்ளது. இது சம்பந்தமாக அக்கிளையின் செயலாளர் பொது முகாமையாளருக்கு எழுதிய கடிதத்திற்கு விபரமாக பதில் அனுப்பி வைக்கப் பட்டுள்ளது. பத்திரிகைச் செய்தியின்படி இச்சங்கத்தில் எந்தவிதமான சிமெந்து மோசடிக்கு இடமில்லை என்பதை வலியுறுத்திக் கூறவிரும்புகின்றேன்.

இம்மாதம் 14 ம் திகதி வெளியான "ஈழநாடு" இதழில் "சிமெந்து விநியோகத்தில் மோசடி" நடப்பதாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், காங்கேசன் சீமெந்துக் கூட்டுத்தாபனத்திலிருந்து தாராளமாகச் சீமெந்துபெற்று அதன் பாவனையாளர்களுக்கு எதுவித கஷ்டமுமின்றி பரவலான கிளைகள்மூலம் 'மோசடி' என்ற சொல்லுக்கு இடமில்லாமல் விநியோகம் செய்துவருகிறது. அண்மையில் சீமெந்துக்கு ஏற்பட்ட தட்டுப்பாடு காரணமாக சீமெந்துக் கூட்டுத்தாபனம் சகல ப. நோ. கூ. சங்கங்களுக்கும் மாதத்திற்கு ஒரு குறிப்பிட்ட தொகையை ஒதுக்கி, அத்தொகையைக் குறிப்பிட்ட திகதிகளில் பெற்றுக்கொள்ளக் கூடியதற்கான அறிவித்தலை அனுப்பியுள்ளது.

## கடைக்குச் சென்ற பாலகன் பஸ்ஸிற்குப் பலியானான்!

(யாழ்ப்பாணம்)

அண்ணனுடன் சாமான் வாங்க கடைக்குச் சென்ற 3 வயது பாலகன் கடை பூட்டியபடியால், திரும்பிவரும் போது அக்காவைக் கண்ட போது வீதியின் குறுக்கே ஓடிய போது இ போ ச. பஸ்ஸிற்கு பலியானார்.

வண்ணார் பண்ணையைச் சேர்ந்த 3 வயதான [illegible] அருணகிரிநாதனின் மரண விசாரணையில் மேற் கண்ட விபரம் தெரியவந்தது.

யாழ் மரண விசாரணை அதிகாரி திரு. எஸ் எஸ். பிரான்சிஸ் மரண விசாரணை நடத்தினார்.

பாலகன் உடனடியாக யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டு அங்கு மரணமானார். சாரதியை 1000 ரூபா பிணையில்செல்ல அனுமதித்து விபத்து மரணம் எனத் தீர்ப்பளித்தார். (க)

## எம். ஜி. ஆர். மீது உரிமைப்பிரச்னைக்கு மறுப்பு

# தி. மு. க. - இந்திரா காங்கிரஸ் வெளிநடப்பு!

சென்னை, ஏப். 22

தமிழ்நாடு சட்டசபையிலிருந்து தி. மு. க. இந்திரா காங்கிரஸ் உறுப்பினர்கள் இன்று வெளிநடப்புச்செய்தனர்

சட்ட சபைப்பேரவையில் முதலமைச்சர் திரு. எம் ஜி ராமச்சந்திரன் மீது கொண்டு வந்த உரிமைப்பிரச்னையை சபாநாயகர் விவாதிக் அனுமதிக்காததால் அவர்கள் சபையிலிருந்து வெளிநடப்புச்செய்தனர்.

இதுதொடர்பான உரிமைப் பிரச்னையை தி. மு. க உறுப்பினர் திரு. ரகுமான்கான் சபையில் கொண்டுவந்த பொழுது அதனைவிவாதிக்கசபாநாயகர் அனுமதிமறுத்ததைத் தொடர்ந்து தி. மு. க. உறுப்பினர்களுக்கும் அரசாங்கக்கட்சியினருக்குமிடையே நடைபெற்ற வாக்குவாதத்தை தொடர்ந்து தி. மு க உறுப்பினர்கள் திரு. மு. கருணாநிதி தலைமையில் சபையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.

உண்மையை வெளிக்கொணர்வதற்காகவே இவ் உரிமைப்பிரச்னையை கொண்டு வந்ததாக இந்திரா காங்கிரஸ் துணைத்தலைவர் திரு. சுந்தரராஜ் சபையில் தெரிவித்தார்

சபாநாயகர் இப்பிரச்னையை விவாதிக்க அனுமதி மறுப்பது சபை உறுப்பினர்களின் உரிமையை மீறுவதாக அமையுமென்று கூறி அவரும் அவரது சகாக்களும் சபையிலிருந்து வெளிநடப்புச்செய்தனர்.

இவர்கள் சபைக்கு திரும்பி வந்து சபை நடவடிக்கைகளில் மீண்டும் கலந்துகொண்டனர். (வெ)

## லக்ஸ்பிறே விலை அதிகரிப்பு

(கொழும்பு

லக்ஸ்பிறே பால்மாவின்விலை அதிகரித்துள்ளது.

400கிராம் லக்ஸ்பிறேபக்கெற்றின் விலை 12ரூபாவாக இருந்தது இப்பொழுது அதன்விலை 12-50 சதமாக உயர்ந்துள்ளது. உற்பத்திச்செலவு அதிகரிப்பினாலேயே இந்தவிலைஉயர்வு ஏற்பட்டதாகக் மொ வி. [illegible] வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேசமயம் கடந்ததிங்கட்கிழமைவெளியான வர்த்தமான அறிவித்தலின்பிரகாரம் 400 கிராம்பக்கெற்றின் விலை 12ரூபாவென அறிவிக்கப்பட்டிருந்தது. (து

## குட்டிமணி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அவர்கள் இறக்கவில்லையென்றும் ஆனால் அவர்கள் தங்கியிருந்ததற்கான அறிகுறிகள் காணப்பட்டதாகவும் தெரிகிறது (ம-கு)

## மட்டக்களப்பு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திரு. பூ. கணேசலிங்கத்தின் இல்லத்தில் நடைபெற்றது.

### கூட்டணி வேட்பாளர்கள்

திரு. சி. சம்பந்தமூர்த்தி, தன்னாமுனை கிராமசபையின் முன்னாள் தலைவர் திரு. எஸ். ஆலாலசுந்தரம், முன்னாள் எம். பி. திரு. மு. இராசமாணிக்கத்தின் மூத்த மருமகன் திரு. அல்பேட் டானியல், விவசாயியான திரு வே. தம்பிராசா ஆகியோரே பட்டியலில் இடம் பெற்றுள்ளனர்.

### ஐ. தே. க. பட்டியல்

ஐ. தே. க. வேட்பாளர் பட்டியலில் கே. மாணிக்கம், மீரா மொஹிதீன், வி. வாமதேவன், வி. சண்முகநாதன் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

### சுதந்திரக்கட்சி வேட்பாளர்

சுதந்திரக்கட்சிப் பட்டியலில் முன்னாள் எம். பி. திரு ராஜன் செல்வநாயகம், அகமட் லெப்பை, சிவசண்முகம், தர்மதாசா ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

மேற்படி மூன்று கட்சிகளைத் தவிர வேறு கட்சிகளோ அல்லது சுயேச்சைக் குழுக்களோ மட்டக்களப்பு மாவட்டத்தில் போட்டியிடமாட்டாது என்று நம்பகமாகத் தெரியவருகிறது. (கு)

## பிரசவலீவை பெண்கள் விரும்பியவாறு எடுக்கலாம்!

(கொழும்பு)

சகல பெண் ஊழியர்களுக்கும் பிரசவ லீவு வழங்குவது தொடர்பான சட்ட மூலத்தில் திருத்தம் செய்வதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இந்த லீவை தாம் விரும்பிய காலத்தில்; பிரசவத்தின் முன்போ அல்லது, பின்போ ஆறு கிழமைகளுக்கு எடுக்க முடியும்

தற்போதுள்ள நடைமுறையில் இதுபற்றி தெளிவாக குறிப்பிடாதது தொடர்பாகவே இந்தத் திருத்தம் கொண்டுவரப்படவுள்ளது.

நேற்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்திலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டது.

தனியாரின் அச்சுவேலைகளையும் பொறுப்பேற்றுச் செய்வதற்கு அரசாங்கக் கூட்டுத்தாபனத்திற்கு அனுமதியளிக்கும்வகையில் சட்ட மூலத்தை திருத்துவதென்றும் அமைச்சரவை முடிவுசெய்தது. (ம-கு)

## தேவை

'பிறசியர்ஸ்' வெட்டித் தைக்கக்கூடிய பெண்கள் தேவை. நேரில் வரவும் "நதுலாம்ஸ்" 181, அரசடி வீதி, (றெயில்வே கடவைஅருகில்) கந்தர்மடம். 8931

## திருத்தம்

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் கிறீன் வைத்தியசாலையில் பலவருடங்களாக டாக்டராகப் பணியாற்றிய டாக்டர் டபிள்யூ ஜேம்ஸன் ஐயரின் மகள் திருமதி கிளடிஸ் ஜேம்ஸனும் அவரது மூன்று புதல்விகளுமே அண்மையில் மானிப்பாய் ஆஸ்பத்திரிக்கு விஜயம்செய்தனர்.

நேற்றைய 'ஈழநாடு' இதழில் டாக்டர் ஜேம்ஸன் ஐயரின் பாரியார் என்றிருப்பது தவறாகும். (ஆர்)

[illegible] ஏப்ரல் 23-ம் திகதி [illegible] வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under No QB [illegible] The [illegible] P. B. No. 6, Telegrams "Eelanaadu" Phones: [illegible]